

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து** : **ஓவியர்கள்: நமது காலத்து ஓவியர்கள், தங்களின் திறமைகளின் வழியாக படைப்பின் அழகை கண்டறிய எல்லாருக்கும் உதவிட வேண்டுமென்று**

**ஆகஸ்டு மாத கரு** : **நற்கருணை நமக்கு ஊக்கமளிக்கிறது**

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| ஆக 6 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>மாலை 6.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம )<br>திருப்பலி (த) | ஆண்டவரின் உருமாற்றம்<br>ஆண்டவரின் உருமாற்றம்<br>புனித செபஸ்தியார் சிற்றாலயம், முனிசிபல் |
| ஆக 7 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித சிஸ்டஸ் II |
| ஆக 8 செவ் | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித தோமினிக் |
| ஆக 10 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | புனித லாரன்ஸ் |
| ஆக 11 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | புனித கிளாரா |
| ஆக 12 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | சாந்தால் நகர் புனித ஜான் பிரான்சிஸ்கா |
| ஆக 13 ஞா | காலை 7.00<br>காலை 9.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம) | பொதுக்காலம் 19ஆம் ஞாயிறு<br>பொதுக்காலம் 19ஆம் ஞாயிறு |

## பங்கு நடவடிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| ஆக 6 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.00 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |
| ஆக 7 திங் | மாலை 8.00<br>மாலை 8.00 | பெர். மை 1-3<br>முனிசிபல் | புலூமா மகளிர் குழு கூட்டம்<br>அருங்கொடை (த) |
| ஆக 8 செவ் | காலை 8.30<br>மாலை 8.00 | பெர். மை 1-3<br>பெர். மையம் | பங்கு பரிந்துரை குழு<br>பங்கு தலைவர்கள் உருவாக்கம் (அதிச & பணிக்குழு) |
| ஆக 9 புதன் | மாலை 8.00 | ஆலயம் | புனித அகஸ்டின் பாடல்குழு பயிற்சி (த) |
| ஆக 10 வியா | மாலை 7.00<br>மாலை 7.30 | ஆலயம்<br>பெர். மை 2-2 | முன்னோன் வாசகர் பயிற்சி<br>RCIA |
| ஆக 11 வெள் | மாலை 7.30<br>மாலை 8.00<br>மாலை 8.00 | பெர். மை 1-2<br>ஜெலாப்பாங்<br>புந்தோங் தீகா | பங்கு நிதிக்குழு கூட்டம்<br>அருங்கொடை (த)<br>இரக்கமிகு ஆண்டவர் செபம் |
| ஆக 12 சனி | காலை 8.45<br>காலை 10.00<br>மாலை 5.30 | பெர். மை 2-1<br>பெர். மை 2-5<br>ஆலயம் | பங்கு திருமண தயாரிப்பு பயிற்சி<br>சீடத்துவ நிகழ்வு<br>செபமாலை/ சகாயமாதா நவநாள் |
| ஆக 13 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.00<br>மாலை 8.00 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம்<br>பெர். மை 1-3 | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த)<br>நம்பிக்கை மைய கூட்டம் |

**ஆகஸ்டு & செப்டம்பர் மாத திருமணங்கள் 2017**

| | | | |
|---|---|---|---|
| ஆக 26 | காலை 11.00 | சடங்கு (த) | பிரபு த/பெ மாரிமுத்து & செலின் ஏன் த/பெ லூயிஸ் |
| ஆக 26 | பிற்பகல் 2.00 | சடங்கு (த) | சசிதரன் த/பெ ஜா ராமன் & சகாய பிரிசில்லா த/பெ இன்னாசி |
| ஆக 26 | மாலை 4.30 | திருமணம் (ஆ) | சார்ல்ஸ் பெத்தி த/பெ மரிய சூசை & சேரா ரோஸ்லின் த/பெ மோகன் |
| செப் 1 | மாலை 4.30 | திருமணம் (த) | நிக்லஸ் த/பெ அந்தோணிசாமி & பிரின்சி செரினா த/பெ பிரான்சிஸ் |

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

# பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. செபமாலை**: 13 ஆக 2017 (ஞாயிறு) மாலை 6.00க்கு புனித செபஸ்தியார் சிற்றாலயத்தில் செபமாலை நடைபெறும்.

**2. பிமஇக அகப்பக்கம் தொடக்கம் & சிறிய இளைஞர் தினம்**: 13 ~ 17 வயதுள்ள முகாம் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் இந்த அர்த்தமுள்ள நிகழ்வில் பங்கேற்க வரவேற்கப்படுகிறீர்கள். பினாங்கு மறைமாவட்ட இளைஞர்களுக்காக இயங்கலை தகவல் தளமானது சில வேடிக்கையான மற்றும் விசுவாசம் நிறைந்த செயல்பாடுகளுடன் தொடங்குகிறது.

**நிகழ்வு**: பிமஇக அகப்பக்கம் தொடக்கம் & சிறிய இளைஞர் தினம் **நாள்**: 13 ஆக 2017 (ஞாயிறு) @ காலை 9.00 இடம்: புனித லூர்து அன்னை தேவாலயம், சிலிபின், ஈப்போ பங்கேற்பாளர்: முகாம் மாணவர்கள் & இளைஞர்கள் (வயது 13-17)

**3. காலை சிற்றுண்டி**: தனித்த தாய்மார்கள் 13 ஆக & 20 ஆக 2017 (ஞாயிறு) காலை திருப்பலிகளுக்கு பிறகு வாழ்வின் ஊற்று அலுவலகத்தில் காலை சிற்றுண்டியை விற்பனை செய்ய ஏற்பாடு செய்துள்ளனர்.

**4. தயவு செய்து திருவழிப்பாட்டு நல்லொழுக்கத்தை கடைப்பிடியுங்கள்**: திருவழிப்பாட்டு கொண்டாட்டத்தில் மரியாதை குறைவாக நடப்பதை பார்க்கும் போது என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆலயத்தில் சிலர் இன்னும் கைப்பேசியை பயன்படுத்துகின்றனர். சிலர் நற்கருணை வழிப்பாட்டின் போது நடந்துக்கொண்டிருக்கின்றனர். சிலர் நற்கருணையை பெறும்போது "ஆமென்" என்றும் சொல்வதில்லை. சிலர் எடுத்துக்கொண்டு நடக்கின்றனர் ஆனால் உண்ணுதில்லை. ஆலயத்தில் நாம் புனிதமாக இருக்க கற்றுக்கொள்ள வேண்டும் என நினைக்கிறேன்.

**5. திருமண முதல் பிரதிவாதிகள்:** உங்கள் நண்பர்கள் அல்லது உறவினர்கள் யாரேனும் தங்களது திருமண விவகாரம் பற்றி உங்களை நாடுகின்றனரா? அவர்களுக்கு ஆதரவு அளித்து உதவ விரும்புகிறீர்களா? அப்படி விரும்பினால் தம்பதியர் மற்றும் குடும்ப பிணி நீக்கல் துறையில் முனைவர் பட்டம் பெற்ற அருள் தந்தை சார்ல்ஸ் சிம், சே.ச, இரண்டு நாள் பட்டறையின் வழி உங்களுக்கு தேவையான 7 அடிப்படையான திறமைகளை அறிமுகப்படுத்தி, மற்ற நிபுணர்களை தொடர்பு கொள்ளவும் கற்றுத்தருவார். நாள்: 2~3 செப் 2017, இடம்: புனித அன்னம்மாள் விடுதி, புனித அன்னம்மாள் ஆலயம், புக்கிட் மெர்தாஜாம், மேல் விவரங்களுக்கு குமாரி தெரேசா வான் (017-5788192/ 04-2610273)/ மின்னஞ்சல்: goodshepherdcs@gmail. Com

**6. ஈப்போ கார்டன், புனித சகாய மாதா தேவாலயம், பங்கு மனித வள மேம்பாட்டுக்குழு**: ஏற்பாட்டில் மனித கடத்தல் (மனுக்குலத்திற்கு எதிரான திட்டமிடப்பட்ட குற்றம்) ஓர் அனைத்துலக விவகாரம் பற்றிய சொற்பொழிவு. **வழங்குபவர்**: Dr. சீலா தேவி மைக்கல். நாள்: 6 ஆக 2017 (ஞாயிறு) **நேரம்**: மாலை 3.00~5.00 வரை இடம்: புசமா மண்டபம் பதிவு: புசமாதே பங்கு அலுவலகம் (05-5458220) அனைவரும் வரவேற்கப்படுகிறீர்கள். தேநீரும், சிற்றுண்டியும் வழங்கப்படும்.

**7. பெற்றோர் ஆதரவுக் குழு**: ஈப்போ, புனித லூர்து அன்னை தேவாலயப் பங்கு மூத்த குடிமக்கள் உள்ளிட்ட "மாற்றுத் திறனாளிகளுக்கும், ஆதரவற்றோருக்கும் ஏழ்மையில் உள்ளோருக்கும் வசதிகளும் சலுகைகளும்" என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்கிறது. இந்த நடப்பு பிரச்சினை பற்றி திருமதி பார்வதி (கிந்தா மாவட்ட சமூக நல இலாகா) ஆங்கிலத்திலும் தமிழிலும் உரையாற்றுவார். நாள்: 20 ஆக 2017 (ஞாயிறு) நேரம்: காலை 11.00 இடம்: பங்கு மண்டபம். அனைவரும் வரவேற்கப்படுகிறீர்கள்.

8. **உள்ளிருப்பு தேவழைத்தல் 2017**: "என் பின்னே வாருங்கள்; நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" மத் 4:19 **நாள்:** 31 ஆக ~ 3 செப் வரை (வியா~ஞா) **இடம்:** பொது குருத்துவ கல்லூரி, பினாங்கு **வயது**: (18 - 40 ) மேல் தகவல்களை தெரிந்துக்கொள்ள பினாங்கு மறைமாவட்ட தேவழைத்தல் இயக்குநர்: தந். அலோய்சியஸ் தான் (016-4661946)/ மின்னஞ்சல்: aloytanys@yahoo.com அல்லது பங்கு குருவானவர்களை தொடர்பு கொள்ளவும்.

**9. ஒருங்கிணைந்த இறையியல் கல்வி சான்றிதழ் 2:** அனைவருக்குமானது! நான்கு உற்சாகமான, பாடத்தொகுதிகள்: வத்திக்கான் சங்கம் II, திருச்சபை வரலாறு, மறைப்பணி இறையியல், மற்றும் நன்னெறி இறையியல். 14 அக்டோபரில் தொடங்குகிறது. விரிவுரைகள் மாதத்தில் இரு சனிக்கிழமைகளில் நடைபெறும். (காலை 9.00 ~ மதியம் 1.00 வரை) இடம்: புலூமாதே, சிலிபின், ஈப்போ, பேராக். கட்டணம்: ரிம 400/- @ ஒரு பாடம் ரிம 100/- பங்கேற்பாளர்கள் ஒரு பாடத்தை மட்டும் தேர்ந்தெடுத்து அதற்கேற்ப பணம் செலுத்தலாம். எல்லா நான்கு பாடங்களையும் முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். கையேடுகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது http://www.pdpinstitute.org. மேல் விபர தொடர்புக்கு: 04-2611350 (திங் ~ வெள் அலுவலக நேரம்)

**10. பயிற்சி நேரம்**: பங்கின் எல்லா தலைவர்களுக்கும் தீமமோ IV சிந்தனையை அடிப்படையாக கொண்ட செயல்முறைகள் பற்றிய பயிற்சி நடைபெறும். நாள்: 23~25 ஆக 2017 (புதன், வியா& வெள்) நேரம்: இரவு 8.00~10.00 இடம்: பெர். மை

**11. அடக்க ஏற்பாடு:** அடுத்த 5 வருடங்களுக்கு தம்பூனில் உள்ள கத்தோலிக்க கல்லறையை புனித சகாய மாதா தேவாலயம் நிர்வாகம் செய்யும். நமது பங்கில் ஏதேனும் மரணம் ஏற்பட்டால் உடனடியாக திருப்பலிக்கான ஏற்பாட்டிற்கு புலூமா பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். அதன் பிறகு அடக்கத்திற்கான ஏற்பாட்டிற்கு நீங்கள் உடனடியாக புனித சகாய மாதா தேவாலயத்தை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். மற்ற நேரங்களில் தோமஸ் ஜீ (012-5182818) தொடர்பு கொள்ளவும்.

**12. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி ஜூலை 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **339,881.65** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **342,729.88** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**30/07/17 திருப்பலி வசூல்கள்: காலை** 8.30 - RM 1,083.85 **2017** - RM 45.00

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்